# கொரிய அதிபருடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 10, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடி 10 செப்டம்பர் 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டின் இடையே கொரிய அதிபர் திரு யூன் சுக் இயோலை சந்தித்தார்.

இந்தியாவின் ஜி20 தலைமைக்கு ஜனாதிபதி யூன் சுக் இயோல் பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்தார். சந்திரயான் திட்டத்தின் வெற்றிக்காக பிரதமருக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

இந்த ஆண்டு இராஜதந்திர உறவுகளை நிறுவி 50 ஆண்டுகள் நிறைவடைகிறது என்று தலைவர்கள் குறிப்பிட்டனர். வர்த்தகம் மற்றும் முதலீடு, பாதுகாப்பு உற்பத்தி, குறைக்கடத்திகள் மற்றும் மின்சார வாகன பேட்டரி தொழில்நுட்பம் உள்ளிட்ட இருதரப்பு சிறப்பு மூலோபாய கூட்டுறவின் பல்வேறு துறைகளில் முன்னேற்றத்தை அவர்கள் மதிப்பாய்வு செய்தனர்.

பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் அவர்கள் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

**புது தில்லி**
**செப்டம்பர் 10, 2023**